KAYALPATTINAM MUNICIPALITY
FORM 3
Minutes of the Meeting held on 13.12.2012

| Date of the Council Meeting | Decision Number | Subject of the Agenda | Decision of the Council |
|---|---|---|---|
| 14.12.12 | 422 | காயல்பட்டணம் நகராட்சிக்கு புதிய குடிநீர் மேம்பாட்டுத்திட்டம் ரூ.29.67 கோடியில் செயல்படுத்த அரசின் அனுமதி பெறப்பட்டு (அரசு ஆணை எண்.51 ந.நி.கு.வ துறை (WS -3) நாள்: 16.02.2012) நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி ( நக.எண்.44560/2010/தஎ2 நாள்: 18.04.2012) மற்றும் நகராட்சி நிர்வாக தலைமைப்பொறியாளர் அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதியும் ( நக.எண்.25622/2012/னுமு நாள்: 19.07.2012) பெறப்பட்டு 04.09.2012 அன்று இந்திய அளவில் விளம்பரம் செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவணங்கள் இந்த ஒப்பந்த அழைப்பில் கலந்து கொண்டுள்ளன.<br>1) M/S Megha Engineering & Infrastructures Limited,<br>S-2 Tie ,Balanagar .Hyderabad -500037 ,Andhrapradesh,India<br>2) M/S Sriram EPC Limited, 4th Floor ,Sigappi achi building,<br>No.18/3 Rukmini Lakhsmipathi salai ,Egmore ,Chennai -600008<br>மேற்கண்ட இரண்டு நிறுவணங்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப ஆவணங்கள் 04.09.2012 அன்றே திறக்கப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக தொழில்நுட்ப நிலைக்குழுவில் (Technical Standing Committee) சமர்ப்பிக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக தொழில்நுட்ப நிலைக்குழுவின் 08.10.2012 தேதிய கூட்ட நடவடிக்கைகளின் படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப ஆவணங்கள் அடங்கிய உறை ஏற்றுக்கொள்ளப்பட்டு 22.10.2012 அன்று ஒப்பந்தப்புள்ளியின் விலைப்பட்டியல் திறக்கப்பட்டது. அதன் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைவிகிதம் வரப்பெற்றுள்ளது.<br>வ.எண் நிறுவனத்தின் பெயர் ஒப்பந்த விலைவிகிதம்<br>1M/S Megha Engineering & Infrastructures<br>Limited, S-2 Tie ,Balanagar .Hyderabad - | மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | | 500037 , Andhrapradesh,India<br>மதிப்பீடு ரேட்டிற்கு 18.39மூ<br>கூடுதல்(ரூ. 3002,71,277.05)<br>2M /S Sriram EPC Limited, 4th Floor ,<br>Sigappi achi building,No.18/3 Rukmini<br>Lakhsmipathi salai , Egmore ,<br>Chennai -600008<br>மதிப்பீடு ரேட்டிற்கு 16.68%<br>கூடுதல்( ரூ.2959,39,402.03 )<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் வழங்கியுள்ள M/S Sriram EPC Limited நிறுவனத்திற்கு, அந்நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள விலை ரூ. 2959,39,402.03 -ஐ விலைக்குறைப்பு செய்து தர 30.10.2012 அன்று நகராட்சியின் மூலம் விலைக்குறைப்பு சம்மதக்கடிதம் (Negotiation) அனுப்பப்பட்டது. மேற்கண்ட நிறுவனம் தனது 16.11.2012ம் தேதிய கடிதத்தில் ரூ.2784,15,000/- (9.77%)க்கு விலைக்குறைப்பு செய்து விலைக்குறைப்பு சம்மதம் தெரிவித்துள்ளது. இருப்பினும் மேலும் விலைக்குறைப்பு செய்ய நகராட்சியின் மூலம் மேற்கண்ட நிறுவனத்திற்கு 20.11.2012 அன்று இரண்டாவது விலைக்குறைப்பு சம்மதக்கடிதம் அனுப்பப்பட்டது.அதற்கு மேற்கண்ட நிறுவணம் தனது 26.11.2012ம் தேதிய கடிதத்தில், மணல் போன்ற கட்டுமானப்பொருட்கள் உள்ளுர் சந்தை விலையை விட மிக அதிகமான விலையில் கொள்முதல் செய்து பணி மேற்கொள்ள உள்ளதால் ஏற்கனவே விலைக்குறைப்பு சம்மதக்கடிதம் வழங்கிய 9.77% (ரூ.2784,15,000/-) விலைக்குறைப்பை விட மீண்டும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என்றும் மதிப்பீடு விலையை விட கூடுதலாக கோரப்பட்ட ஒவ்வொரு பணிக்கும் எதனால் விலை அதிகமாக கோரப்பட்டது என்ற விளக்கவுரையும் (Justification) தெரிவித்துள்ளது. எனவே மேற்கண்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தற்போதைய ஒப்பந்தப்புள்ளி தொகையினை (ரூ.2784,15,000/-) நகராட்சி ஏற்று நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலக ஒப்பந்தப்புள்ளி சீராய்வு குழுவின் (Tender Award Committee) முடிவுக்கு பரிந்துரை செய்து நகர்மன்றம் தீர்மானம் எண். 411 நாள்:: 30.11.2012 மூலம் அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப்பொறியாளர் அவர்களின் தலைமையில் 07.12.2012ல் நடந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கல் குழுவில் விவாதிக்கப்பட்டு கீழ்க்கண்ட நிபந்தனைகளின் படி | |

| | | | |
|---|---|---|---|
| | | குறைநத் ஒப்பந்தபுள்ளி தொகை ரூ.2784,15,000/- (9.77% மதிப்பீடு ரேட்டை விட கூடுதல்)) வழங்கிய M/S Sriram EPC Limited, சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிக்கு அனுமதி வழங்க நகர்மன்றத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.<br>1. குடிநீர் பணிகளுக்கு பயன்படுத்தப்படும் குழாய்களை தயார் செய்யும் இடம் மற்றும் பணி நடைபெறும் இடங்களில் நகராட்சிப்பொறியாளர் அல்லது மண்டல செயற்பொறியாளர் ஆய்வு செய்து அதன் தரத்தினை உறுதி செய்யவேண்டும்.<br>2. மதிப்பீடு ரேட்டிற்கு 15% க்கு அதிகமாக விலை கோரப்பட்டுள்ள பணிகளை மதிப்பீட்டில் உள்ள அளவுகளை விட கூடுதலாக செய்யக்கூடாது.<br>3. மதிப்பீடு ரேட்டிற்கு 15% க்கு குறைவாக விலை கோரப்பட்டுள்ள பணிகளை மதிப்பீட்டில் உள்ளவாறு எந்த வித பணிகளும் தவிர்க்கப்படாமல் செய்யப்படவேண்டும்.<br>4. பணிகள் நடைபெறும் பொழுது மேற்கண்ட நிபந்தனைகளில் ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டும் என்றால் பணிகளை செய்வதற்கு முன் அதற்கு அனுமதி பெறவேண்டும்.எனவே நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப்பொறியாளர் தலைமையில் நடந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கல் குழுவின் பரிந்துரையை ஏற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/S Sriram EPC Limited, Chennai நிறுவனத்தின் ஒபப்ந்த் புள்ளியை ( ரூ.*2784இ15000/-* , *9.77%* மதிப்பீடு ரேட்டை விட கூடுதல் ) வழங்கிய M/S Sriram EPC Limited, சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிக்கு அனுமதி வழங்க நகர்மன்றத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.<br>1. குடிநீர் பணிகளுக்கு பயன்படுத்தப்படும் குழாய்களை தயார் செய்யும் இடம் மற்றும் பணி நடைபெறும் இடங்களில் நகராட்சிப்பொறியாளர் அல்லது மண்டல செயற்பொறியாளர் ஆய்வு செய்து அதன் தரத்தினை உறுதி செய்யவேண்டும்.<br>2. மதிப்பீடு ரேட்டிற்கு 15% க்கு அதிகமாக விலை கோரப்பட்டுள்ள பணிகளை மதிப்பீட்டில் உள்ள அளவுகளை விட கூடுதலாக செய்யக்கூடாது.<br>3. மதிப்பீடு ரேட்டிற்கு 15% க்கு குறைவாக விலை கோரப்பட்டுள்ள பணிகளை மதிப்பீட்டில் உள்ளவாறு எந்த வித பணிகளும் தவிர்க்கப்படாமல் செய்யப்படவேண்டும். | |

| | | | |
|---|---|---|---|
| | | 4. பணிகள் நடைபெறும் பொழுது மேற்கண்ட நிபந்தனைகளில் ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டும் என்றால் பணிகளை செய்வதற்கு முன் அதற்கு அனுமதி பெறவேண்டும்.<br>எனவே நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப்பொறியாளர் தலைமையில் நடந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கல் குழுவின் பரிந்துரையை ஏற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/S Sriram EPC Limited, Chennai நிறுவனத்தின் ஒபப் நத் பப் ள்ளியை ( ரூ.2784,15000/- , 9.77% மதிப்பீடு ரேட்டை விட கூடுதல் ) ஏறறு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | |